**நீநீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் வியாழட்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 05/2019**
**in**
**குற்றவியல் பல்வகை மனு எண். 60/2026**

செல்வம் (எ) முத்துசாமி,
த/பெ. கருப்புசாமி,
4/99, காந்திபுரம், கணக்கம்பாளையம்,
உடுமலைப்பேட்டை தாலுக்கா.

...மனுதாரர்/எதிரி

/எதிரி/

சசிக்குமார்,
த/பெ. மனோகரன்,
2, அனுசம் நகர், நாச்சிமுத்து லே அவுட்,
உடுமலைப்பேட்டை தாலுக்கா.

...எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இந்த மனுவானது 20.01.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.C.சிதம்பரசாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.A. வேல்மணி, M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பின் வாதத்தைக் கேட்டறிந்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்த வரை இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்,

**உத்தரவு**

மனுதாரர் இந்த மனுவை குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**1. மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள மனு கீழ்க்கண்டவாறு :**

(01.01) மனுதாரர் தனது மனுவில் கடந்த 28.09.2022 ஆம் தேதியில் புகார்தாரர் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 2016-2017 ஆம் வருட வருமானம் எவ்வளவு என்றாலும் அதற்காக புகார்தாரர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் தான் செலுத்துவதாக கூறியதன் பேரில் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை வருமான வரியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை குறித்து எதிரி தரப்பில் மேற்படி புகார்தாரரை விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், நீதிமன்றம் மூலமாக அழைத்து விசாரணை செய்வதால் புகார்தாரருக்கு எவ்விதமான நியாயமான ஆட்சேபணை இருக்க வாய்ப்பில்லை என்றும், புகார்தாரர் தரப்பு சாட்சியங்களை நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்தால் மட்டுமே உண்மை தன்மை தெரியவரும் என்றும், எனவே புகார்தாரரை (பு.சா.1) அழைத்து விசாரணை செய்ய இவ்வழக்கை மீள் திறப்பு செய்ய வேண்டி தக்க உத்தரவிடுமாறும் இல்லையெனில் மனுதாரருக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டுவிடும் என்றும், மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளார்

**2. எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை கீழ்க்கண்டவாறு :**

(02.01) இம்மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

(02.02) மனுதாரர்/எதிரி தரப்பில் கோரப்பட்டுள்ள பிரதாப், ரவிச்சந்திரன், வின்சென்ட் மற்றும் பிரதாப் மனைவி பிங்கோல் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை மோசடி வழக்குகளில் புகார் அலுவலக நகல்கள் தாக்கல் செய்யுமாறு கோரியுள்ளார் என்றும், மேற்படி கோரப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கில் எதிரி விசாரிக்கும் போது அவரது தரப்பு சான்றாவணங்களாக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும்

புகார்தாரரின் HDFC, ICICI, Axis Bank மற்றும் கரூர் வைஸ்யா வங்கியில் பெறப்பட்ட கடனை காட்டுவதற்குண்டான கணக்கு நகல் அல்லது வங்கி பாஸ் புத்தகம் ஆகியவற்றை தாக்கல் செய்யுமாறு கோரியுள்ளார் என்றும், ஒரு தனிப்பட்ட நபரின் வங்கி கணக்கு மற்றும் பாஸ் புத்தகங்களை கேட்க கடனாளியான இந்த மனுதாரருக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், ஏற்கனவே வழக்கு முழுவதும் நடத்தப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே எழுத்து மூலமான வாதவுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எந்தவித முகாந்திரமுமின்றி இவ்வழக்கை காலதாமதம் ஏற்படுத்தவே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டு மேற்படி மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களும் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

**3. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 311-ன் கீழான இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும் ?**

(03.01) இம்மனுவின் அசல் வழக்கானது கடந்த 18.01.2019 ம் தேதியன்று நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு STC No.05/2019 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

(03.02) இந்நிலையில், மனுதாரர் மேற்படி வழக்கு கடந்த 28.09.2022 ஆம் தேதியில் புகார்தாரர் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 2016-2017 ஆம் வருட வருமானம் எவ்வளவு என்றாலும் அதற்காக புகார்தாரர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் தான் செலுத்துவதாக கூறியதன் பேரில் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை வருமான வரியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை குறித்து எதிரி தரப்பில் மேற்படி புகார்தாரரை விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், மேற்படி புகார்தாரரை நீதிமன்றத்திற்கு

அழைத்து விசாரணை செய்ய இவ்வழக்கை மீள் திறப்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் இம்மனுதாரர் கோரப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கில் எதிரி விசாரிக்கும் போது அவரது தரப்பு சான்றாவணங்களாக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் ஒரு தனிப்பட்ட நபரின் வங்கி கணக்கு மற்றும் பாஸ் புத்தகங்களை கேட்க கடனாளியான இந்த மனுதாரருக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் கூறியுள்ள எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும் வகையில் உள்ளது.

மேலும் எதிர்மனுதாரர்/புகார்தாரரின் தரப்பில் எழுத்து மூலமான வாதுரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிற நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்/புகார்தாரரால் இவ்வழக்கானது கடந்த 18.01.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் தற்போது வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இம்மனுவானது எதிரியான இம்மனுதாரால் கடந்த 20.01.2026 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(03.05) எனவே இவ்வழக்கான கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 07 வருடங்களாக நிலுவையில் இருந்து வருகிறது என்பதைக் கருத்திற்கொண்டும், அசல் வழக்கின் புகார்தாரரை இம்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே மூன்று முறை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற் கொண்டும், எதிரிக்கு இந்நீதிமன்றத்தால் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டும் இம்னுவானது தள்ளுபடி செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(03.06) இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.05 22:17:24 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.